**MCOP No.** : 336/2024

**Name** : முத்தையா

**PW** : 1

**Date** : 03.07.2026.

<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

இந்த விபத்தில் இரண்டு வாகனங்கள் சம்மந்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். TN 55 AD 7984 வாகனம் எனக்கு சொந்தமானது. 12.07.2024-ல் நான்தான் வாகனத்தை ஓட்டிச்சென்றேன். நான் ஓட்டிசென்ற வாகனத்திற்கு பதிவுச்சான்றிதழ் ஓட்டுநர் உரிமம் இருந்தது. காவல்நிலையத்தில் அந்த ஆவணங்களை ஒப்படைத்துள்ளேன். அதை காவல்துறை கைப்பற்றி மோட்டார் தணிக்கைக்கு உட்படுத்தியுள்ளனர். நான் விபத்து தேதியில் தலைகவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. எனது மனுவிலும் நிரூபண வாக்குமூலத்திலும் தலைகவசம் அணிந்ததாக கூறவில்லை. ம.சா.12 ஆவணத்தில் காப்பீடு தாக்கல் செய்யவில்லை என்று கூறப்பட்டுள்ளது. காப்பீடு ஆவணம் இல்லாமல் தலைகவசம் அணியாமல் வாகனத்தை இயக்கி நானே விபத்தை ஏற்படுத்திகொண்டேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதார் விபத்திற்கு பொறுப்பில்லை என்றால் சரியல்ல. நான் முதல்வர் காப்பீடு மற்றும் பிரதமர் காப்பீடு திட்டத்தில் உறுப்பினர் இல்லை. தனியார் காப்பீடு எதுவும் எடுக்கவில்லை. நான் மருத்துவசெலவிற்கு ஒரு இலட்சம் வரை செலவு செய்துள்ளேன். நான் செலவு செய்ததற்கு மருத்துவ அதிகாரியை விசாரித்தால் தெரியும். 19.07.2024 க்கு பிறகு உடலில் பிரச்சணை இல்லை என்பதால் மருத்துவரை அனுகவில்லை என்றால் சரியல்ல. அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. எனக்கு ஏற்ட்ட காயங்கள் குணமாகிவிட்டது என்றும் பணி பாதிப்பு எதுவும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு நிரந்தர ஊனம் இல்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு நான் கூட்டுபொறுப்பு என்றும் நான் ஓட்டிசென்ற வாகனத்தின் உரிமையாளர் மற்றும் காப்பீட்டு நிறுவனத்தை சேர்க்காததால் என் மனு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதாலும் காப்பீட்டு விதிகள் மீறப்பட்டுள்ளதாலும் 2ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரருக்கு எதிரான மனுவை தள்ளுபடி செய்வது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொண்டு என்முன்பாக கையொப்பம் செய்தார்.

Sd/–G.விஜயகுமார்
**மாவட்ட நீதிபதி,**
**(மோ.வா.வி.கோ. தீர்பாயம்), புதுக்கோட்டை.**